# மணநாள் வாழ்த்து!



20-03-2022

சின்னஞ்சிறு வயதில் சேர்ந்து விளையாடி,
கண்ட பொழுதிலெல்லாம் கலந்து உறவாடி,
கொண்டதாம் கல்வியிலும் கூட்டிக் கழித்து,
சென்றதோர் பணியகமும் ஒரே முற்றமாக,

இருவேறு வாயிலுடை ஒருவீடாம் எங்களது!
கருவாக அதுவும் கூடுமிடம் அதில் சேரும்!
உருவாகி காலத்தில் பணிநிறைவு கண்டாலும்,
தருவாக பேச்சினூடே அதுவே நிறைந்திருக்கும்!

அன்போடும், அது வளர்த்த நல்லுறவினோடும்,
மன்னியசீர் **இராஜா** வுக்கும் மதிப்புயர் **லதா** வுக்கும்,
இன்று காணும் மணநாளில், இதயம் நிறைந்து,
கொண்டாடி மகிழ்ந்து வாழ்த்து கின்றோம்!
அன்புடன்,
**அசோகன் & மங்கை** (11.20 AM)